**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No.49/2021**
**U/s. 448,342,506(i),392,120 IPC**
**PROSECUTION WITNESS NO. 5 (LW. 9)**

| | |
|---|---|
| **Name** : வினோத் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**2,3** எதிரிகள் ஆஜர்**. (1** வது எதிரி **Split up CC .No. 271/2026** ல் பிடிகட்டளையில் உள்ளார்**.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 49/2021 09.06.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.20**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் கீழவாசலில் குடியிருந்து மளிகை கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்துகள் முறையே அசாஆ 4, அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 08.01.2021 ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் , எனது கடையின் உரிமையாளர் வீட்டில் திருட்டு சம்பவம் நடந்ததாக கூறி போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் சுரேஷ் என்பவரும் கையெழுத்து செய்தார். 8 பவுன் ஆரம் , 1 ஜோடி தோடு ஆகியவற்றை கைபற்றினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அசா1 மலையபெருமான் எனது கடையின் உரிமையாளர் என்றால் சரிதான். அவர் கடையில் சுமார் 8 வருடங்களாக வேலை செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்தினை எங்கு வைத்து செய்தேன் என்றால் அசா1 வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். என்னுடன் சுரேஷ் என்பவரும் கையெழுத்து செய்தார். அவர் அசா1 ன் டிரைவராக இருக்கிறார். நான் எத்தனை தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் இரண்டு தாளில் கையெழுத்து செய்தேன். சுரேசும் , நானும் கையெழுத்து செய்த தாளில் வேறு எவரேனும் கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்த தாளில் பேனாவால் எழுதி இருந்தார்கள். அதனை உதவி ஆய்வாளர் எழுதினார். அவர் எத்தனை தாளில் எழுதி இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது கடையின் உரிமையாளருக்காக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரியல்ல. உரிமையாளர் வீட்டில் வைத்து தான் கையெழுத்து செய்தேன்.

**(3 வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை 2 வது தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறினார்.)**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**CC.NO. 49/2021** தேதி: **09.06.2026**

**2,3 எதிரிகள் ஆஜர். (1 வது எதிரி Split up CC .No. 271/2026 ல் பிடிகட்டளையில் உள்ளார்.**

<u>அசா 4 திரு. பாலாஜி த/பெ மலைபெருமான் நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

ஆஜர் 2,3 எதிரிகளை தெரியும். 9 பவுன் நகைகள் திருட்டு போனது. அந்த நகைகள் 16.01.2021 ம் தேதி போலீசார் கண்டுபிடித்து கொடுத்தார்கள். இவ்வழக்கின் 1 வது எதிரி வைத்தீஸ்வரன் என்பவரை தெரியும். அந்த நகைகளை நாங்கள் பெற்று கொண்டோம்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. எனது கடையிலிருந்து காவல் நிலையத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு நான் புகார் கொடுக்க செல்லவில்லை. எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொன்னார்கள். புகார் கொடுத்த பிறகு போலீசார் 2-3 முறை வீட்டில் வந்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பா மருத்துவமனைக்கு செல்லவேண்டுமென்று எதிரிகளிடமிருந்து காப்பாற்றி கொள்வதற்காக பொய்யாக நடித்தார் . எனது தந்தையுடன் நானும் காரில் சென்றேன் என்றால் சரிதான். அப்போது மணி 12.45 மேல் இருக்கும். அந்த காரில் டிரைவர் சுரேஷ், நான் மற்றும் எனது அப்பாவும் சென்றோம். அப்பொழுது 250 மீட்டர் தூரம் சென்ற பிறகு நான் காரில் இருந்து இறங்கி விட்டேன். அப்பாவும் , டிரைவரும் ஒரு மளிகை கடையிலிருந்து போன் மூலமாக தொடர்பு கொண்டதாக எப்போது என்னிடம் சொன்னார் என்றால் எனது அப்பா அன்றையதினமே என்னிடம் கூறினார். நகையை பெறுவதற்கு காவல் நிலையத்திற்கு அப்பா தான் சென்றார் நான் செல்லவில்லை. புகார் கொடுக்க எனது அப்பா எப்போது சென்றார் என்றால் அன்றையதினம் மாலை சுமார் 4.00 மணி இருக்கும்.

2. எனது வீட்டிற்கு அருகே 10-15 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் குறித்து பக்கத்து வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எதிர்ப்புறம் என் கடை உள்ளது. எனது கடைக்கு அருகே எத்தனை உள்ளது என்றால் சுமார் 4-5 கடைகள் உள்ளது. அந்த பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் இல்லை. சராசரியாக இருக்கும். நான் எனது அப்பாவுடன் காரில் சென்றபோது , 250 மீட்டர் சென்றபிறகு இறங்கிய நேரத்தில் காவல் துறைக்கு நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனதுஅப்பா கொடுத்த புகாரின் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**(3 வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை 2 வது தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறினார்.)**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.